# ஆர்ய வைத்திய பார்மசியில் அன்னையர் தினவிழா

கோவை, ஜூன் 2–

கோவை ராமநாதபுரம் ஆர்ய வைத்திய பார்மசியில் எம்.டி.சி.ஆர்.சி. சார்பில் அன்னையர் தின விழா எம்.டி.சி.ஆர்.சி தலைவர் டாக்டர் பி.ஆர்.லட்சுமி முன்னிலையில் நடைபெற்றது. விழாவில் பிரபல பேச்சாளர் முனைவர் ஜெயந்தி ஸ்ரீ பாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். விழாவில் குறிஞ்சி ஆஸ்பத்திரி தலைவர் கே.சி.ராமசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் எம்.டி.சி. தன்னார்வ அமைப்பின் தலைவர் டாக்டர் பி.ஆர்.லட்சுமி வரவேற்று பேசியதாவது:– உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. இந்த நோய் மரபு வழியாக வருவதாக டாக்டர்கள் கண்டு பிடித்துள்ளனர். பெரும்பாலும் ஆண் குழந்தைகளுக்கு தான் இது அதிகம் ஏற்படுகிறது. இதற்காக எம்.டி.சி.ஆர்.சி என்ற தன்னார்வ அமைப்பு இலாப நோக்கம் இன்றி செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராக நான் உள்ளேன்.

தமிழக அரசுடன் இணைந்து இந்த நோய்க்கான சிகிச்சையை செய்து வருகிறோம். டூஷீன் தசை சிதைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்கு 12 ஆண்டுகளாக சேவையாற்றி வருகிறது. நாம் கற்ற அறிவியல் சமுதாயத்தை சென்றடைவதே எம்.டி.சி.ஆர்.சியின் நோக்கமாகும். எம்.டி.சி.ஆர்.சி.

தனது குடும்ப ஆதரவு சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மையம் மூலமாக குழந்தைகளின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்திற்காக பாடுபாட்டு வருகின்றது.

மரபணு பரிசோதனை கலந்தாய்வு, பல்துறை மருத்துவ முகாம் குடும்ப ஆதரவு சேவைகள் அனைத்தும் இங்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்றார். முன்னதாக நடைபெற்ற விழாவில் அன்னையருக்கான விளையாட்டு, வேடிக்கை நிகழ்ச்சிகள், திறன் வெளிப்படுத்தும் போட்டிகள் நடைபெற்றன.